முருகப்பெருமான் துணை

**மகான் கௌசிகர் அருளிய அறிவுரை ஆசி நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

**09.06.2023**, வெள்ளிக்கிழமை

1. ஞானச்சுடரே அரங்க மகானே
ஞானம் அருளும் ஞான தேசிகனே
வானவர்களும் இணைந்து வழிகாட்ட
வள்ளலாய் அருளும் ஞானியே
2. ஞானியே உன் பெருமை கூறி
ஞாலமதில் சோபகிருது விடைதிங்கள்
இனிமைபட இருபானாற் திகதி புகர்வாரம்
(சோபகிருது வருடம் வைகாசி மாதம் **26** ம் நாள், **09.06.2023**, வெள்ளிக்கிழமை)
இயம்பிடுவேன் அறிவுரை ஆசி
3. ஆசிதனை கௌசிகர் யானும்
அருளுவேன் உலகநலம் பெற
வாசிவென்ற மக்கள் கூட்டமாக
வையகத்தை மாற்றி காக்க
4. காக்கவே யோக ஞானம் தரும்
கருணைமிக்க அரங்கமகானின்
பக்குவம் நிறைந்த நெறிமுறைகளை
பழுதின்றி மக்கள் ஏற்று வர
5. வருகவே சுத்த சைவ நெறிபட
வள்ளல் தன்மை தருகின்ற
தருமமாம் அரங்கன் அன்னதான
தயவு நெறிதனை ஏற்றுத்தொடர
6. தொடரவே தரும ஞான பலத்தால்
தெய்வ பலமாம் ஆறுமுகனாரின்
சுடராக ஆசியதும் பரவியே
சுத்திகளும் தேகமனம் அடைந்து
7. அடைந்துமே ஞானவான்களாக
அனைவரும் ஆற்றல் பெருகி
தடையின்றி தொடர்ந்து வர
தவராஜனும் முன்மொழிய இனிதே

8. இனிதே ஆறுமுகப் பெருமானும்
இயம்பிடுவேன் சூட்சுமமாக வாசிநிலை
கனிவுடன் நடத்தித் தருகவே
காப்பாக வாசி நின்று உலகோர்

9. உலகோர் ஞானிகள் ஆவர்
உண்மைபொருள் தானறிந்து
பழகவே அரங்கஞானி வழியில்
பல்வேறு மேல்நிலைகள் தேறி

10. தேறியே ஞான உலகம் படைக்கும்
தேசிகன் வழிவழி ஞானிகளாகி
மாறியே உலகமெல்லாம் கூட்டம்
மறுமை வெல்லும் சக்திகளாக

11. ஆகவே ஆற்றல் பெருக்கி
அரங்கன் விரும்பும் உலகமாற்றம்
மிகைபட சடுதி நடந்தேறும்
முருகப்பெருமான் மகிமையாக அரங்கேறும்
அறிவுரை ஆசி முற்றே

–சுபம்–